**செய்தி வெளியீடு எண்: 197** **நாள்: 16.03.2018**

**செய்தி வெளியீடு**

அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் வாசகர்கள் மற்றும் குழந்தைகள் நலனுக்காக பல நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டு தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

குழந்தைகளுக்கான நிகழ்ச்சிகள் வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணி முதல் 12:30 மணிவரை நடைபெற்று வருகிறது.

'பொன்மாலைப்பொழுது' என்ற தலைப்பில் பல்வேறு துறைகளில் உள்ள பிரபல ஆளுமைகளுடன் சந்திப்பு வாரந்தோறும் சனிக்கிழமை நடைபெற்று வருகிறது. இந்நிகழ்ச்சியின் 50வது நிகழ்வு வருகின்ற 17.03.2018 சனிக்கிழமை அன்று காலை 11.00 மணிக்கு நடைபெற உள்ளது. இச்சிறப்பு நிகழ்வில் நடிகர், எழுத்தாளர் மற்றும் பன்முகம் கொண்ட திரு. சிவகுமார் அவர்கள் பங்கு கொண்டு சிறப்புரையாற்றி வாசகர்களுடன் கலந்துரையாடவுள்ளார்.

இந்நிகழ்ச்சியில் பங்குகொள்ள விரும்புகிறவர்கள் இலவசமாக கலந்து கொள்ளலாம். நிகழ்ச்சிகள் பற்றிய விவரங்கள் www.annacentenarylibrary.org என்ற இணையதளம் மூலம் காணலாம் என தெரிவிக்கப்படுகிறது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**